**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC 15/2023.
Prosecution witness-1.

| | |
|---|---|
| பெயர் : லெட்சுமி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of June 2023.

26.06.2023

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். கடந்த 22.08.2022 ம் தேதி இராமநாதபுரம் கூரிசாத்தன் கோவிலுக்கு எனது கணவர் காலை 10.30 மணியளவில் வீட்டில் இருந்து இருசக்கர வாகனமான ஸ்கூடியில் சென்றார். கோவிலுக்கு சென்றுவிட்டு சத்திரக்குடி வழியாக மதியம் 01.30 மணியளவில் உடையூரில் இருந்து மீசல் செல்லும் ரோட்டு விலக்கில் அரசு பேருந்து மோதி எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக எனது அண்ணன் முருகேசன் எனக்கு போன் மூலமாக தகவல் கூறினார்.

2) உடனே நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது எனது கணவர் விபத்தில் அடிபட்டு இறந்து கிடந்தார். 14 ம் நம்பர் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக என்னிடம் கூறினார்கள். சம்பவ இடத்திற்கு நான் சென்றபோது அரசு பேருந்தை ஓட்டி வந்த ஆஜர் எதிரியும் சம்பவ இடத்தில் இருந்தார். பின்பு பரமக்குடி அரசு மருத்துவமனையில் சேர்ந்து உடல் கூறாய்வு செய்து பின்னர் இறுதி சடங்கிற்கு

உடலை ஒப்படைத்தார்கள்.

3) இது குறித்து நான் கீழத்தூவல் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர், எதிரி கற்றறிந்த வழக்கறிஞர் வந்துதான் குறுக்கு விசாரணை செய்யவேண்டும் என்று கூறியதன் அடிப்படையில் போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.